**செய்தி வெளியீடு எண்: 213** **நாள்: 05.03.2011**

"மங்கையராய் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டுமம்மா! என்றார் புரட்சிக் கவி பாரதி. " பெண்கள் வீட்டின் கண்கள்" என அனைவராலும் புகழப்படும் பெண்ணினத்தை போற்றும் வகையில் "மகளிர் தினம் மார்ச் 8ம் நாள் கொண்டாடப்படுகிறது. இந்த நாளினை மகளிர் அனைவரும் சிறப்புடன் கொண்டாடுவதற்காக கோ-ஆப்டெக்ஸ் 20% தள்ளுபடியுடன் மகளிர் தின சிறப்பு சலுகையாக 5% தள்ளுபடியை கூடுதலாக வழங்குகிறது. மங்கையருக்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ள மருதம் மென்பட்டு, நெகமம் காட்டன், அழகிய ஜமுக்கி வேலைபாடுகள் அமைந்த எம்பராய்டரி சேலைகள், காஞ்சி காட்டன், சுடிதார் மற்றும் குழந்தைகளுக்கான பிரத்யேக ஆயத்த ஆடைகள், பட்டு, பருத்தி இரகங்கள் மட்டுமின்றி வீட்டு உபயோகத்திற்கான படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், துண்டுகள், மிதியடிகள், திரைச் சீலைகள் ஆகியன கண்கவர் வண்ணங்களில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மகளிர் தினத்தினை முன்னிட்டு கோ-ஆப்டெக்ஸின் அனைத்து விற்பனை நிலையங்களிலும் 7.3.2011 முதல் 9.3.2011 வரை இச் சலுகையினைப் பெற்று, கைத்தறி இரகங்களின் விற்பனையை ஊக்குவிப்பதோடு, நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர, வாடிக்கையாளர்கள் உதவிட, கோ-ஆப்டெக்ஸ் கேட்டுக்கொள்கிறது.

– கோ-ஆப்டெக்ஸ் –

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**

–